ஊடக நண்பர்களுக்கு வணக்கம்.

ஆரம்ப காலம் முதல் இன்று வரை தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களில் ஊடக நண்பர்களின் பேராதரவுடன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நான் சென்று கொண்டு வருகிறேன்.

இந்த வரிசையில், நான் நடித்த பல விளம்பரப் படங்களை பாராட்டி என்னை ஊக்குவித்த நீங்கள், முதல் முதலில் நான் தயாரித்து நடித்த 'லெஜெண்ட்' திரைப்படத்தையும் பார்த்து உங்களில் பலர் நேரிலும் தொலைபேசியிலும் வாழ்த்து தெரிவித்தீர்கள். அதற்கு மனமார்ந்த நன்றி.

எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் விமர்சனம் செய்வதும் விமர்சிக்கப்படுவதும் இயல்பு. விமர்சனங்களையும் விமர்சிப்பவர்களையும் கடந்து அடுத்த கட்டத்திற்கு நோக்கி முன்னேறி செல்வது தான் வெற்றி என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

'லெஜெண்ட்' திரைப்படத்தை பார்த்து உங்கள் கருத்துக்களை பதிவு செய்ததற்கு மனமார்ந்த நன்றி. உங்கள் விமர்சனங்களும் கருத்துகளும் எனது அடுத்தக் கட்ட முயற்சிக்கு துணையாக இருந்தன என்பது உண்மை.

இந்த படம் வெளியான பிறகு என்னை நேரில் சந்திக்கும் பலரும் சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பு கொள்வோரும் 'லெஜெண்ட்' திரைப்படத்தின் ஓடிடி ரிலீஸ் எப்போது என்று மிகவும் ஆவலுடன் கேட்டு வந்துள்ளார்கள்.

இவ்வாறு கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்காக இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி. 'லெஜெண்ட்' திரைப்படம் ஹாட்ஸ்டார் தளத்தில் இன்று-மார்ச் 3 -(வெள்ளிக்கிழமை)அன்று மதியம் 12:30 மணி முதல் உலகமெங்கும்

தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாகிறது எனும் தகவலை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

லெஜண்ட்' சரவணன்

03:03:23

வெள்ளிக்கிழமை